**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.384 நாள்: 12.08.2026

**வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் வார்டு-94 மற்றும் 95 பகுதியில் உள்ள பொதுமக்களின் அடிப்படை வசதிகளுக்கான சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-94 மற்றும் 95 பகுதிகளில் உள்ள பொதுமக்களின் அடிப்படை வசதிகளுக்காக சிட்கோ நகர், மாநகராட்சி சமூக நலக் கூடத்தில் சிறப்பு முகாம் இன்று (12.08.2026) நடைபெற்றது.

இந்த சிறப்பு முகாமினை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, முகாமிற்கு வருகைதந்த பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இந்த முகாமில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ், தொழில் வரி மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான சேவைகள், சென்னைக் குடிநீர் வாரியம், மின்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், வருவாய்த்துறை, இ-சேவை மையம், ஆதார் சேவைகள், பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் கலந்து கொண்டு இப்பகுதி மக்களிடமிருந்து 1,810 மனுக்கள் பெறப்பட்டு, அதன் மீது தீர்வு காண்பதற்கு துறை வாரியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முகாமில் அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**